தஞ்சாவூர் பெரிய கோயில் மாமன்னன் முதலாம் ராஜராஜ சோழனால் கி.பி.1003-ம் ஆண்டில் கட்ட தொடங்கப் பெற்று, 1010-ம் ஆண்டில் நிறைவு பெற்றது. 3.66 மீட்டர் உயரம் கொண்ட லிங்க வடிவிலான சிவன், பெருமன்னன் ராஜராஜன் பெயரால் ராசராசேச்சுரமுடையார் என்று அழைக்கப்பட்டார்.

தஞ்சாவூர் பெரிய கோயில் 240 மீட்டர் நீளம், 120 மீட்டர் அகலம் கொண்ட பெரும் பரப்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இக்கோயிலின் விமானம் 8 துண்டுகளாக 81.284 டன் எடையுள்ள சிகரத்தை கொண்டதாக விளங்குகிறது.

### கள்ளக்குறிச்சி மாவட்டத்தில்

# வருவாய்த் துறை ஊழியர்கள் வேலைநிறுத்தம்

■ கள்ளக்குறிச்சி



பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தை வலியுறுத்தி தமிழ்மாநில வருவாய்த் துறை அலுவலர் சங்கம் விடுத்த அழைப்பின் பேரில், வருவாய்த் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறையினர் நேற்று அடையாள வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டதால் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் அரசு அலுவலக இருக்கைகள் காலியாக இருந்தன.

2021 சட்டப்பேரவைத் தேர்தலின்போது திமுக அளித்த வாக்குறுதியின்படி பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தை ரத்து செய்துவிட்டு, பழைய ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்தப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றக் கோரி, தமிழகம் முழுவதும் அரசு ஊழியர்கள் நேற்று வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். காலவரையற்ற வேலை நிறுத்தத்துக்கு முன்னோடியாக ஒரு நாள் வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு தமிழ் மாநில வருவாய் துறை அலுவலர் சங்கம் அழைப்பு விடுத்தது.

அதன்பேரில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் அரசு அலுவலர்கள் இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் அலுவலர்களின் இருக்கைகள் காலியாக காணப்பட்டன. விடுமுறை எடுத்து வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் அரசு ஊழியர்களுக்கு ஊதியம் பிடித்தம் செய்யப்படும் என்று அரசின் தலைமைச் செயலாளர் அறிவிப்பு வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

### 'வொர்ல்ட் ஸ்கில்ஸ் ஆசியா தைபே 2025' போட்டி

# தமிழகத்துக்கு பெருமை சேர்த்த 3 இளைஞர்கள் கவுரவிப்பு

**துணை முதல்வர் உதயநிதி காசோலை வழங்கி பாராட்டினார்**

■ சென்னை

'வொர்ல்ட் ஸ்கில்ஸ் ஆசியா தைபே 2025' போட்டியில் சாதனை படைத்து இந்தியாவுக்கும் தமிழகத்துக்கும் பெருமை சேர்த்த இளைஞர்களை கவுரவிக்கும் சிறப்பு பாராட்டு விழா துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில் நடைபெற்றது.

தைவானின் தைபே நகரில் 'வொர்ல்ட் ஸ்கில்ஸ் ஆசியா தைபே 2025' எனப்படும் ஆசியாவின் முக்கியமான திறன் போட்டியின் 3-வது பதிப்பு 2025 நவ. 27 முதல் 29 வரை நடைபெற்றது. 29 நாடுகளிலிருந்து 500-க்கும் மேற்பட்ட போட்டியாளர்கள் கலந்துகொண்ட இப்போட்டியில் இந்தியா பங்கேற்று 8-வது இடத்தைப் பெற்றது.

இப்போட்டியில் இந்தியா முழுவதும் இருந்து 23 போட்டியாளர்கள் பங்கேற்றனர். அதில் தமிழகத்தைச் சேர்ந்த 3 பேர் தேர்வாகியிருந்தது குறிப்பிடத்தக்கது. பல்வேறு பிரிவுகளில் நடைபெற்ற இந்தப் போட்டியில் இந்தியா ஒரு வெள்ளிப் பதக்கம், 2 வெண்கலப் பதக்கங்கள் மற்றும் 3 மெடல் ஆஃப் எக்ஸலென்ஸ் ஆகியவற்றைப் பெற்றுள்ளது.

'வொர்ல்ட் ஸ்கில்ஸ் ஆசியா தைபே 2025' போட்டியில் பங்கேற்று பதக்கம் வென்று சாதனை படைத்த தமிழக இளைஞர்களுக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் காசோலை வழங்கி கவுரவித்தார். உடன் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் கிரந்தி குமார் பாடி.

இந்த சாதனைகள் அனைத்தும், தமிழக இளைஞர்கள் நான் முதல்வன் – தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மூலம் பயிற்சி பெற்று, தமிழ்நாடு திறன் போட்டி போன்ற மாநிலத் திறன் போட்டிகளில் தேர்ச்சி பெற்று, இந்தியாவைத் தாண்டி உலக அரங்கில் மிளிரும் திறனை வெளிப்படுத்துகின்றன.

வொர்ல்ட் ஸ்கில்ஸ் ஆசியா தைபே 2025 போட்டியில் சிறப்பான சாதனை படைத்த தமிழ்நாட்டு இளைஞர்களை கவுரவிக்கும் சிறப்பு பாராட்டு விழா துணை முதல்வர் உதயநிதியின் முகாம் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்த தினேஷ் ராமசாமி – Robot System Integration திறன் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்றதற்காக ரூ.5 லட்சம் காசோலை வழங்கப்பட்டது. கரூர் மாவட்டத்தைச் சேர்ந்த முகமது மஃபாஸ் – Software Application Development திறன் பிரிவில் மெடல் ஆஃப் எக்ஸலென்ஸ் பெற்றதற்காக ரூ.3 லட்சம் காசோலை வழங்கப்பட்டது.

அதேபோல ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த சுரேந்திரன் – Plastering & Dry Wall Systems திறன் பிரிவில் இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கேற்றதற்காக ரூ.2 லட்சம் காசோலை வழங்கப்பட்டது.

தமிழக இளைஞர்கள் வரவிருக்கும் இந்திய திறன் போட்டி 2025 மற்றும் உலகத் திறன் போட்டி – ஷாங்காய் 2026 போட்டிகளில் பங்குபெற்று மேலும் சாதனைகளைப் படைக்க துணை முதல்வர் உதயநிதி வாழ்த்தினார்.

இந்நிகழ்வில் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் கிரந்தி குமார் பாடி மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### 'பெஸ்ட் புதுச்சேரி' அறக்கட்டளை தொடக்கம்

# சோகோ நிறுவனர் ஸ்ரீதர் வேம்புவை அழைத்து முதல் நிகழ்வை நடத்த திட்டம்

■ புதுச்சேரி

புதுச்சேரியில் 'பெஸ்ட் புதுச்சேரி' அறக்கட்டளை நேற்று தொடங்கப்பட்டது.

இந்த அறக்கட்டளையை தொடங்கிய தொலைத்தொடர்பு துறை நிபுணர் முத்துக்குமார் சுப்பிரமணியன், சாம்ராஜ், சரவணன், காமராஜ், செல்வ கணபதி, விண்ணரசன், முருகன் ஆகியோர் கூறியதாவது:

புதுச்சேரியை வணிகம், கல்வி, ஆன்மிகம், சுற்றுலா துறைகளில் சிறந்து மேம்படுத்தவும், அனைத்து துறைகளிலும் வளர்ச்சியை துரிதப்படுத்தவும் அரசுக்கும் மக்களுக்கும் பாலமாக செயல்படுவதே 'பெஸ்ட் புதுச்சேரி' அறக்கட்டளையின் நோக்கம்.

இந்த அமைப்புக்கு ஆலோசகராக உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் இருப்பார்.

அறக்கட்டளை முதல் நிகழ்வில் சோகோ நிறுவனர் ஸ்ரீதர் வேம்பு பங்கேற்று புதுச்சேரிக்கான வளர்ச்சி, இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு தொடர்பாக உரையாற்றுவார்.

பழைய துறைமுக வளாகத்தில் வரும் 20-ம்தேதி மாலை இந்நிகழ்வு நடத்துகிறது.

'பெஸ்ட் புதுச்சேரி' அமைப்பைத் தொடங்கியவர்கள் அதற்கான லோகோவை வெளியிட்டனர்.

கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள் இந்நிகழ்வில் பங்கேற்கலாம். பல துறைகளில் புதுச்சேரி வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றும் 50-க்கும் மேற்பட்ட சாதனையாளர்கள் இவ்விழாவில் கவுரவிக்கப்படுவார்கள். அத்துடன் உள்ளூர் கைவினைக்கலைஞர்கள், தொழில்முனைவோர், மாணவர் குழுக்களின் புதுமை முயற்சிகளை வெளிப்படுத்தும் முன்மாதிரியான ஸ்டால்களும் இடம் பெறும்.

அத்துடன் பொது பங்கேற்பை வலுப்படுத்தும் நோக்கில் புதுச்சேரி பண்பாடு மற்றும் முன்னேற்றத்தை பிரதிபலிக்கும் குறும்படங்கள், புகைப்படங்கள், குறிப்புகளை பொது மக்கள் சமர்ப்பிக்கலாம்.

தேர்ந்தெடுக்கப்பட்ட பதிவுகள் விழா மேடையில் தங்க நாணயத்துடன் கவுரவிக்கப்படும் என்று தெரிவித்தனர்.

## மூதாட்டி அணிந்திருந்த 5 பவுன் நகை மாயம்

■ விழுப்புரம்

விழுப்புரம் மாவட்டம் வானூர் அடுத்த கொந்தமூர் கிராமம் மாரியம்மன கோயில் தெருவைச் சேர்ந்தவர் ரங்கநாதன் மனைவி பச்சையம்மாள் (72).

இவர், கிளியனூருக்கு சென்று மளிகை பொருட்களைகடந்த8-ம்தேதிவாங்கிக்கொண்டு வீட்டுக்கு செல்வதற்காக தனியார் பேருந்தில் பயணம் செய்தார். கொந்தமூர் கிராமம் பேருந்து நிறுத்தத்தில்இறங்கிவீட்டுக்கு சென்றுள்ளார்.

அப்போது கழுத்தில் அணிந்திருந்த 5 பவுன் செயினை காணவில்லை. இது குறித்து கிளியனூர் போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.


**இந்து தமிழ் திசை**

**பொறுப்பல்ல:** இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர்/ அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் குழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.



**தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்**
19–ஏ, ருக்குமணி இலட்சுமிபதி சாலை, எழும்பூர், சென்னை–600008.
CIN U74999TN1971SGC005967

ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண்.என்ஐடி.47/க.பி/ஒ.எண்.47/2025-26 (இணையவழி மட்டும்) நாள்: 11.12.2025

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் சார்பாக ஒப்பந்தப்புள்ளிகள் **"ஒரு உறை முறையில்"** இணையவழி வாயிலாக மட்டும் பின்வரும் பணிக்கு **வகுப்பு– IV மற்றும் அதற்குமேல்** மாநில அளவில் உள்ள தமிழ்நாடு பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை மற்றும் இதரத்துறைகள் /மத்திய அரசுக்கு உட்பட்ட துறைகள் மற்றும் தமிழ்நாடு அரசு சார்பு நிறுவனங்களில் பதிவுபெற்ற ஒத்த பணிகளில் அனுபவம் பெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள். **30.12.2025** மாலை **15.30** மணி (சேவையக கடிகார நேரத்தின் படி). பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள். **31.12.2025** மாலை **15.30** மணிக்கு (சேவையக கடிகார நேரத்தின் படி) திறக்கப்படும்.

| பணியின் பெயர் | திட்ட மதிப்பீடு | முன் வைப்புத் தொகை |
|---|---|---|
| ஏ. சாத்தனூர் உள்ள சிப்காட் தொழிற்பூங்காவில் 10.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நிலத்தடி நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணி | **ரூ.93.10 இலட்சம்** (GST 18% உட்பட) | **ரூ.57,000/–*** |

* முன் வைப்பு தொகையை இணையதளம் மூலமாகவோ (https://tntenders.gov.in) அல்லது eBG வாயிலாகவோ இணையதளத்தில் செலுத்தலாம் (இணைப்பு–II இல் சான்றளிக்கப்பட்ட வங்கிகளின் பட்டியலின்படி)

ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்ட இணையதளம் மூலமாக இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இணையதள முகவரி https://tntenders.gov.in

செ.ம.தொ.இ./6614/ஒப்பந்தப்புள்ளி/2025 **சிறப்புத் தலைமை பொறியாளர்**



**மதுரை மாநகராட்சி**
**ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை**

மதுரை மாநகராட்சி ஆணையாளர் அவர்களால் மதுரை மாநகராட்சியால் மேற்கொள்ளப்படவுள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிக்கு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படுகிறது.

| பணியின் பெயர் | ஒப்பந்தபுள்ளிகள் சமர்ப்பிக்கும் நாள் | ஒப்பந்தபுள்ளிகள் திறக்கப்படும் நாள் |
|---|---|---|
| EI/017517/15th CFC AAQ/2025-26 மதுரை மாநகராட்சி 15th CFC (AAQ) 2025-26 திட்டத்தின் கீழ் மதுரை மாநகராட்சியில் பணிகள் மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடம் இருந்து ஒப்பந்தபுள்ளி வரவேற்கப்படுகிறது. (குறைந்தபட்சமாக ஒரு சிப்பத்தின் மதிப்பு ரூ.**17.00/-** இலட்சம் முதல் அதிகபட்சமாக ரூ.**111.00/-** இலட்சம் வரை ஆகும்.) (மொத்தம் -13 சிப்பம்) | From 15.12.2025 To 30.12.2025 3.00 pm | 30.12.2025 4.00 pm |

இதர விபரங்களை http://www.tntenders.gov.in என்ற இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம்.
Contact No : 0452 - 2540333 ஆணையாளர்
செமொதொஇ /6599/ஒப்பந்தப்புள்ளி / 2025 மதுரை மாநகராட்சி



**SBFC பைனான்ஸ் லிமிடெட்**
பதிவு அலுவலகம் : யூனிட் எண்.103, முதல் தளம், C&B ஸ்கூயர், சங்கம் காம்பளக்ஸ், சாகலா கிராமம், அந்தேரி-குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு), மும்பை-400059

**சுவாதீன அறிவிப்பு**
(அடமான வட்டி (அமலாக்கம்) விதிகள், 2002-ன் விதி 8(2)-ன்படி)

SBFC பைனான்ஸ் லிமிடெட்-யின் அதிகாரபூர்வ அலுவலராக கீழே கையொப்பமிட்டுள்ளவர், 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல், நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 பிரிவு 13(12)ன் கீழும் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிகளில், விதி 8-ன் கீழும் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கடன்தாரர்கள்/இணை-கடன்தாரர்கள்-களுக்கு கோரிக்கை அறிவிப்புகளை அனுப்பி அந்த அறிவிப்பு கிடைத்த 60 நாட்களுக்குள் அதில் காணும் பாக்கித் தொகை செலுத்துமாறு கோரியிருந்தார்.
மேற்படி பாக்கித்தொகையை மேற்குறிப்பிட்ட கடன்தாரர்கள்/இணை-கடன்தாரர்கள் செலுத்த தவறிவிட்டபடியால் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்/இணை-கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன் மூலம் அறிவிப்பதாவது மேற்படி சட்டம் பிரிவு 13(4) மற்றும் அதற்குத் தொடர்புடைய மேற்படி விதிகளில் விதி 8-ல் தமக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை கீழ்குறிப்பிட்டுள்ள தேதியன்று சுவாதீனம் செய்துள்ளார்.
மேற்குறிப்பிட்ட கடன்தாரகள்/இணை-கடன்தார்கள் குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில் சுவாதீனமான சொத்துக்கள் விஷயத்தில் எவரும் எவ்வித பேரமும் வைத்துக் கொள்ளக்கூடாது, மீறி வைத்துக்கொண்டால் அது SBFC பைனான்ஸ் லிமிடெட்-க்கு செலுத்தப்ப வேண்டிய பாக்கித்தொகை செலுத்துவதற்கு கட்டுப்பட்டதாகும்.

| கடன்தாரர்கள் பெயர் மற்றும் முகவரி மற்றும் கோரிக்கை நாள் மற்றும் கடன் கணக்கு எண். | சொத்து(க்கள்) விவரம் மற்றும் சுவாதீனம் நாள் | சுவாதீனம் அறிக்கையில் கோரப்பட்ட தொகை (ரூ.) |
|---|---|---|
| **1. திரு. சுந்தரப்பாண்டியன் D, 2. திரு. தனபால் ரத்தினசாமி, 3. திருமதி. சேவராணி தனபால், 4. திருமதி. S இளக்கியா, அனைவரின் முகவரி:** அம்மன் கோவில் தெரு காட்டுசாகை புலியூர், மேற்கு புலியூர் கடலூர், தமிழ்நாடு. **மற்றும் மேலும் :** புலியூர் மேற்கு கிராமம், குறிஞ்சிபாடி தாலுகா, கடலூர் மாவட்டம், பழைய சர்வே எண்கள் 479/1, 479/2, பழைய ச.எண். 461/2, 1) புதிய சர்வே எண். 924/7, 2) புதிய ச.எண். 924/8, ஏர்ஸ் குல்லன்பாடி சார் பதிவு மாவட்டம் மற்றும் கடலூர் பதிவு மாவட்டத்திற்குட்பட்டது. **கோரிக்கை அறிவிப்பு நாள் 21.08.2025 கடன் கணக்கு எண். 0000059207-C (PR01537422) & 0000044444 (PR01502759)** | நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் அதனை சார்ந்த பகுதிகளும், புலியூர் மேற்கு கிராமம், குறிஞ்சிபாடி தாலுகா, கடலூர் மாவட்டம். பரப்பளவு 5232 சதுர அடி, மற்றும் 0.12 சென்ட்ஸ், நிலம், பழைய சர்வே எண்கள். 479/1, 479/2, பழைய ச.எண். 461/2, பட்டா எண். 822, பட்டாவின்படி 1) புதிய சர்வே எண். 924/7, 0.08 1/2, 3706 சதுர அடி சென்ட்ஸ் மற்றும் 2) புதிய ச.எண். 924/8, 0.03 1/2, 1526 சதுர அடி ஏர்ஸ் 0.09.48 ஏர்ஸ்சில். குல்லன்சாவடி சார் பதிவு மாவட்டம் மற்றும் கடலூர் பதிவு மாவட்டத்திற்குட்பட்டது மற்றும் **எல்லைகள்: தெற்கு :** சாலை, **வடக்கு :** மைனர் முருகவேல் மனை, **கிழக்கு :** நத்தம் நிலம், **மேற்கு :** கால்வாய். **சிம்பொலிக் சுவாதீனம் நாள் :** 08.12.2025 | **ரூ.26,16,957/-** (ரூபாய் இருபத்தி ஆறு இலட்சத்து பதினாறாயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்தி ஏழு மட்டும்) **11.08.2025 அன்று உள்ளபடி** |

கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13-ன் துணைப்பிரிவு (8)-ன் ஷரத்துக்களின்படி கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

இடம் : கடலூர், தமிழ்நாடு Sd/- (அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி)
நாள் : 12.12.2025 SBFC பைனான்ஸ் லிமிடெட்



**HDFC BANK** We understand your world
பதிவு அலுவலகம்: ஹெச்டிஎஃசி பேங்க் ஹவுஸ், சேனாபதி பபட் மார்க், லோயர் பேரல், மும்பை–400 013.

**தங்க நகைகளுக்கான ஏல விற்பனை அறிவிப்பு**

இதன் மூலம் குறிப்பாக கடன்தாரர்களுக்கும் பொதுவாக பொதுமக்களுக்கும் அறிவிப்பது என்னவென்றால், பின்வரும் கணக்குகளில் கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்ட / தங்க நகைகளை விற்பதற்கு பொது ஏலம் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. நகைக் கடன் பாக்கிகளை செலுத்துமாறு HDFC பேங்க் லிமிடெட் (வங்கி) அறிவிப்புகளை அனுப்பிய போதும், நகைக் கடன் பெற்ற கடன்தாரர்கள் தாங்கள் முறையாக கையொப்பமிட்டு ஒப்புக்கொண்ட கடன் ஒப்பந்தத்தின் படி, கடனை முறையாக திருப்பிச் செலுத்தவில்லை. பின்வரும் கணக்குகளில் உள்ள பாக்கித் தொகை முழுவதையும் ஏழு நாட்களுக்குள் செலுத்துமாறும், தவறினால் மேல் அறிவிப்பின்றி, அடமானத்தில் உள்ள கடனுக்கு ஈடான தங்க நகைகள் முழுவதும் ஏலத்தில் விட வங்கிக்கு முழு சுதந்திரம் உண்டு எனக் கடன்தாரர்களுக்கு HDFC அறிவிப்பு ஒன்றையும் அளித்துள்ளது. ஆனாலும், கடன்தாரர்கள் அக்கறையின்றி பாக்கித் தொகைகளை செலுத்தாமல் இருந்து வருகின்றனர். எனவே, அடமான கடன் ஒப்பந்தத்தின் கீழ், கடனுக்கு ஈடாக வைக்கப்பட்ட தங்க நகைகள் மீது தமக்குரிய உரிமையை செயல்படுத்துவதற்கு, அடமானம் பெற்றவர் என்ற அளவில் ஒப்பந்தத்தின் படி தனது உரிமைகளை செயல்படுத்த வங்கி உத்தேசித்துள்ளது. அதன்படி, கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள தங்க நகைகள் முழுவதையும் ஏலத்தில் விற்று கடன்தாரர்களிடமிருந்து வங்கிக்குச் சேர வேண்டிய கடன் பாக்கியை வசூலிக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

**ஏலமானது கீழ்க்கண்ட கிளைகளில் 22.12.2025 தேதியில் மாலை 4.00 மணியளவில் நடத்தப்படும்.**
எந்தவொரு காரணத்தால் அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் ஏலம் நடைபெறாவிடில் அல்லது குறிப்பிட்ட தேதியில் முடியவில்லை என்றால் அந்த ஏலத்தை எந்தவொரு அடுத்த தேதி மற்றும் நேரத்தில் நடத்த வங்கிக்கு உரிமை உண்டு.

| வ. எண் | நகை கடன் எண் | கடன்தாரர்கள் பெயர் | கடன் தொகை | ஏலம் நடைபெறும் இடம் (கிளையின் முகவரி) |
|---|---|---|---|---|
| 1 | 4000778645 | **விஜயலட்சுமி சங்கர்** | ₹ 1,56,800/- | HDFC பேங்க் லிமிடெட், எண்.55, அன்னை இந்திரா காந்தி சாலை, பண்ருட்டி - 607106 |
| 2 | 76043847 | **வினோத் மனோகரன்** | ₹ 1,73,700/- | HDFC பேங்க் லிமிடெட், சிவமலர் காம்ப்ளெக்ஸ், எண்.46/285, தரைத்தளம், பஜார் தெரு, விருதாச்சலம் - 606001 |

ஏலமானது "உள்ள இடத்தில் உள்ளவாறான" மற்றும் "உள்ளது உள்ளவாறான" என்ற அடிப்படையில் நடைபெறும். மேற்குறிப்பிட்ட தங்க நகைகளில் தரம், தூய்மை, காரட்டேஜ், எடை அல்லது மதிப்பீடு ஆகியவை பற்றி ஏலத்தின்போது வங்கியானது பிரதிநிதித்துவம் மற்றும் உத்தரவாதம் தர இயலாது. ஏலம் நடைபெறுவதற்கு 45 நிமிடத்திற்கு முன்பாக வல்லுநர் அறிவுறுத்தலுடன் அல்லது அறிவுறுத்தல் இன்றி ஏலதாரர்கள் அவர்களாகவே அவர்கள் சொந்த செலவில் தங்க ஆபரணங்களின் தரம், தூய்மை, காரட்டேஜ், எடை அல்லது மதிப்பீடு குறித்து தங்களுடைய ஏலங்களை சமர்ப்பிப்பதற்கு முன், அவற்றைச் சரிபார்ப்பது, ஆய்வு செய்வது மற்றும் திருப்திப்படுத்துவது நகைகளை வாங்குபவர்களின் முழு மற்றும் முழுமையான பொறுப்பாகும். இது தொடர்பாக வங்கியானது குறைந்தபட்ச கேட்புவிலையை நிர்ணயம் செய்து அதற்குட்பட்டு அனைத்து ஏலத் தொகைகளும் ஏற்கப்படும். ஏல நடவடிக்கைகள் மற்றும் விற்பனை (ஏதாவது இருந்தால்) ஆகியவை வங்கியின் தனிப்பட்ட முடிவின் படி சரி என்று கருதப்பட்ட மேற்கொண்டு விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஏலம் நடைபெறும். மேலே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் கடன் ஒப்பந்தத்தின் அடிப்படையில் வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகையை ஏலத்திற்கு முன் தனது தனிநபர் கடன் கணக்கில் முழுமையாக செலுத்தினால், மேற்குறிப்பிட்ட கடன் கணக்கில் ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள தங்க நகை கடன் விலக்கி கொள்ளப்படும் மற்றும் ஏலம் எந்தவித முன் அறிவிப்பும் இன்றி ஏலமானது வங்கியால் விலக்கி கொள்ளப்படும். வங்கியின் கீழே கையொப்பமிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி அவருக்கு ஏலத்தை தள்ளிவைக்கவோ அல்லது ரத்து செய்யவோ முன் அறிவிப்பு எதுவும் இன்றி ஏல நடவடிக்கைகளை நிறுத்தவோ காரணங்கள் எதுவும் தெரிவிக்காமலேயே ஏலத்தை மறுக்கவோ, தகுந்த காரணத்தை கூறாமலேயே ஏலத் தொகைகள் / ஆபர்களை மறுக்கவோ அதிகாரம் உள்ளது என்பதை அறியவும்.

தேதி : 12.12.2025 Sd/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஹெச்டிஎஃப்சி பேங்க் லிமிடெட்



**தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்**
காகித நகர், மொண்டிப்பட்டி – 621 306. திருச்சி மாவட்டம், தமிழ்நாடு.

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

| ஒப்பந்தப்புள்ளி எண். | பணியின் விவரம் | கடைசி நாள் |
|---|---|---|
| 252623 003652 | திருச்சி TNPL அலகு - II ல் உள்ள Pulp Mill-ல் செய்முறை கட்டுப்பாட்டு அறை மற்றும் கள இயக்கங்களுக்கு உதவி செய்தல் | 26.12.2025 |

பிழை திருத்தங்கள் இருப்பின் அவை NIC இணையதளத்தில் மட்டும் வெளியிடப்படும். மேலும் விபரங்களுக்கு www.tntenders.gov.in/nicgep/app இணையதளத்தில் பார்வையிடவும்.
செ.ம.தொ.இ/6589/ஒப்பந்தப்புள்ளி/2025 நாட்டின் இயற்கைவளம் போற்றும் காகிதம் செய்வோம்



**திருநெல்வேலி மாநகராட்சி**
மின்னணு முறையிலான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு ந.க.எண். TP3/3323/2025

| | | |
|---|---|---|
| 1 | ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலர் பெயர் & முகவரி | ஆணையாளர், திருநெல்வேலி மாநகராட்சி |
| 2 | வேலையின் விபரம், முன் வைப்புத் தொகை மற்றும் பணிகளின் எண்ணிக்கை | பணி விபரம் — EXPRESSION OF INTEREST (EOI)- For Demolition of Unauthorized Portion of Building at VJ Hospital, Tirunelveli. Tirunelveli City Municipal Corporation (TCMC) invites sealed **Expressions of Interest (EOI)** from eligible and experienced demolition contractors for the **safe demolition and debris disposal** of the following structures located at: **Location:** VJ Hospital, 12–12/1, STC College Road, Perumalpuram, Tirunelveli-7 **In compliance with:** Hon'ble High Court Orders **WP(MD) 8033/2020, WMP(MD) 22091/2025 & WMP(MD)27192/2025** — எண்ணிக்கை: 1 |
| 3 | ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த இணையதள முகவரி | மேற்காணும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அட்டவணையை கீழ்க்காணும் இணையதளத்தில் இருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். https://tntenders.gov.in |
| 4 | ஒப்பந்தப்புள்ளிகள் நமூனா இறக்கம் செய்தல் | 13.12.2025 காலை 10 மணி முதல் 22.12.2025 பிற்பகல் 3.00 மணி வரை |
| 5 | ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பித்தல் | 13.12.2025 காலை 10 மணி முதல் 22.12.2025 பிற்பகல் 3.00 மணி வரை |
| 6 | ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் | 22.12.2025 பிற்பகல் 3.30 மணி |
| 7 | முன் கலந்தாய்வு கூட்டம் நடைபெறும் இடம், நாள் மற்றும் நேரம் | மைய அலுவலகம் திட்டப்பிரிவு திருநெல்வேலி மாநகராட்சி, 17.12.2025 காலை 11.00 மணி |

செ.ம.தொ இ./6610/ஒப்பந்தப்புள்ளி/2025 ஆணையாளர், திருநெல்வேலி மாநகராட்சி.



**வரி விளம்பரங்கள்**

**சுய செய்தி** — பெயர்மாற்றம்

பெயர் மாற்றம்
புதுச்சேரி - 605 013, உ